©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 11] சென்னை, புதன்கிழமை, மார்ச் 23, 2011
பங்குனி 9, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 5–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 1/2011.**

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம் .**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2010–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் IV/1919. **2.** (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், "நூற்று ஐம்பத்தைந்து" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "இருநூறு" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 45–ஆம் பிரிவில்,—

(i) ஓரத் தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் ஓரத் தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 45–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"இருநூறு கோட்டங்கள்.";

(ii) (1)–ஆம் உட்பிரிவில், இரு இடங்களில் வருகின்ற ‘‘நூற்று ஐம்பத்தைந்து’’ எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘இருநூறு’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

46.AAA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 46–AA எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

‘‘46—AAA. *தனி வகைமுறைகள்.*— இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளிலோ அல்லது வெளியிடப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், மாநகரக் கோட்டங்களின் நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை, மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியன, 2011–ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற வழக்கமான தேர்தல் வரையிலும் 2011–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்பு இருந்தவாறான அதே நிலையில் அமைந்திருத்தல் வேண்டும்.’’.

48–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 48–ஆம் பிரிவில்,—

(i). (1)–ஆம் உட்பிரிவில், ‘‘நூற்று ஐம்பத்தைந்து’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘இருநூறு’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii). (2)–ஆம் உட்பிரிவில், ‘‘நூற்று ஐம்பத்தைந்து’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘இருநூறு’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கமும் காப்பும்.

**6.** (1) 2010–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2010.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.